இதழ் - 93


# உலகத்தமிழ்

**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்**

திருவள்ளுவராண்டு 2052 15.09.2021

தந்தை பெரியார்
செப்டம்பர் 17
*142-ஆம் பிறந்தநாள்*
சமூக நீதி நாள்

பேரறிஞர் அண்ணா
செப்டம்பர் 15
*122-ஆம் பிறந்தநாள்*



என் தம்பி பரதன் தென்னாப்பிரிக்கா சென்றது தொண்ணூற்று மூன்றாம் ஆண்டு
பண் நம்பிப் பாடல் அமைவதென உரைக்கும் உலகத்தமிழிதழ் தொண்ணூற்று மூன்று

# உள்ளடக்கம்


04 Prayer and Religion

05 ஆசிரியம்

06 ஏழு கடலுக்கு அப்பால்!

07 முகப்புக் கட்டுரை

09 அமெரிக்காவின் ஐம்பது முகங்கள்!

11 தேன் துளி!

12 மதுரைக் குமரனார்

13 ஆங்கிலம் அரும்பிய அரசும்—வாழ்வும்!

14 சிந்தனைக் கட்டுரைகள்

15 தமிழக அரசின் பாராட்டுப் பரிசாளர்!

16 முத்தமிழ்க் கலைஞர்!

17 சிலப்பதிகாரம்–ஆங்கிலம்!

18 குழந்தை இலக்கியம்!

19 Everlasting Tradition !

# உள்ளடக்கம்


**20** பதிகங்களைப் படியுங்கள் !

**21** வ.சுப. மாணிக்கம் - தமிழ் அறிஞர்களில் ஒரு மாணிக்கம்!

**22** அணிந்துரைகள்

**23** **மாண்புமிகு தமிழக முதல்வரின் உலகத் தமிழ்வளர்ச்சிப் பணிகள்**

**24** பேரறிவு நிலை

**25** செம்மைத் தமிழின் சிறப்பு

**26** பாவேந்தரும், மழலையர் நலமும்

**28** பூமழை!

**29** பெரிதினும் பெரிது கேள்

**30** இந்தி மொழியின் நவீன இலக்கியச் சிற்பிகள்!

**31** பயப்படாதீர்கள்!

**32** மலையாள இலக்கிய உலகம்

**33** மறைப்பியல்

**34** அறிவரசன் துணையகராதி!

**35** தொல்லிலக்கியத் தோரணம்!

# நான்கு தூண்கள் !



29

*கலைமாச் செல்வர் திரு.எஸ்.டி.காசிராஜன்* இ.ஆ.ப., (ஓய்வு)

**ஊ**ர்க்காவல் படை இயக்கத்தில் புதுக் கோட்டையில் சிறப்பாகப் பொறுப்பேற்றுப் பொறுமையுடனும் தொண்டு உள்ளத்துட னும், துள்ளும் சுறுசுறுப்புடனும் " செந்தமிழ்த் திலகம்" புலவர் தி.சு. மலையப்பன் எவ்வாறு செயலாற்றினார் என்பது யான் புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த காலத்தில் தெரிந்து மகிழ்ந் திருக்கிறேன்.

ஒரு மேல் நிலைப் பள்ளியின் ஆசிரியராக இருந்த இவர் ஒரு நல்லாசிரியரும் ஆவார். மாணாக்கர்களின் மத்தியில் நேர்மையின் வித்துக்களை ஊக்கத்துடன் விதைத்தவர்; காலந் தவறாமை எனும் பெருஞ்சீர்பண்பைப் பாங்குடன் பறை சாற்றியவர்; ஒழுக்கத்தின் உயர்வுகளை எப்போதும் சொல்லிக் கொடுத் தவர்; வாழ்க்கை எனும் சறுக்கு ஏணியில் துணிவுடனும், நம்பிக்கையுடனும் ஏற வழிகாட்டத் தவறாதவர்.

மாணாக்கர்களை நேசித்தவர். "குருட் டினை நீக்கும் குரு'வாகச் செயல்பட்டவர். யான் தமிழகத்தின் தேர்வாணையத்தில் உறுப்பினராக இருந்த போது அவர் பள்ளியில் படித்துத் தேறி வந்தவர்கள் என் முன்னர்த் தோன்றியிருக்கின்றனர்! அவர்களின் பதில்கள் உற்சாகம் தருவதா கவும் பழைய இனிய நினைவுகளைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தன !

அழகுக்கு அழகு செய்வதுபோல் புதுக்கோட்டை இலக்கிய அணியை அழகு செய்து கொண்டிருக்கும் மலையப்பனைப் பரந்து விரிந்த தமிழகத்தின் இலக்கிய உலகம் நன்கு அறியும். பெருமையோடு பேசும். அவரின் அசைவிலா உழைப்பும் பொச்சாவாமையும், மடியின்மையும் வினைத்திட்பமும் எவரிடமும் அளந்து நயத்துடன் பழகும் பான்மையும் போற்று தற்குரியவை.



அன்னாரின் இலக்கியப் பணியும் சமுதாயத் தொண்டும் வளர்ந்து மிளிர என் நல்வாழ்த்துக்கள். அன்னார் பல்லாண்டு வலிவுடனும் பவிசுடனும் வாழ்ந்து பலரையும் மகிழ்ச்சியுடன் மகிழ்விக்கத் திருச்செந்தூர் முருகன் அருள்புரிவானாக.

**வளரும்...**





# பாரா ஒலிம்பிக்கில் பாராட்டுப் பெறும் பாரதம்

*மாற்றுத்திறனாளிகளுக்கான டோக்கியோ ஒலிம்பிக்ஸ் அனைத்துலக விளையாட்டுத் தொடர் 2020 ஆம் ஆண்டுக்கான போட்டி கொரோனா தொற்று காரணமாக இவ்வாண்டு ஆகஸ்ட் 24 தொடங்கி செப்டம்பர் 5 ஆம் தேதி முடிவுற்றது .16 வது தொடராகக் கருதப்பட்டுள்ளது மிகவும் பாதுகாப்புடன் உள் அரங்கத்திலேயே நடத்தப்பட்டது என்பது உண்மையிலேயே ஜப்பான் அரசின் சாதனை என்றே கருதலாம். 1964 ஆம் ஆண்டிற்குப் பின் நடத்தப்படும் இந்தத் தொடர் இரண்டாம் முறையாக டோக்கியோவில் நடத்தப்படுகிறது என்பது பாராட்டத்தக்க செய்தியாகும்.*

*இம்முறை இந்தியா அதிகபட்சமாக 19 பதக்கங்களை வென்று உலக அளவில் 24 ஆவது இடத்தை பிடித்து பெருமைமிகு நிலைக்கு உயர்ந்து இருக்கிறது என்பது பெருமிதமாக உள்ளது .5 தங்கப் பதக்கங்களையும் 8 வெள்ளிப் பதக்கங்களையும் 6 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று வந்திருக்கின்றனர் நம் இந்திய வீரர்கள். அவனி லெகாரா மற்றும் சிங்கராஜ் அடானா இருவரும் தலா இரண்டு பதக்கங்கள் பெற்று இருப்பது மற்றொரு மைல்கல் என சொல்லலாம் .துப்பாக்கி சுடுதலில் அவனி லெகாரா 10 மீட்டர் போட்டியில் தங்கப் பதக்கமும் 50 மீட்டர் போட்டியில் வெண்கலப் பதக்கமும் பெற்று அனைவரும் வியக்கும் அளவில் அபார சாதனை நிகழ்த்தியுள்ளார், அதேபோல் சிங்க்ராஜ் அதானா அவர்கள் 50 மீட்டர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதலில் வெண்கலப் பதக்கமும் சுடுதல் போட்டியில் வெண்கலம் பெற்று குறிபார்த்து சுடும் போட்டிகளில் முத்திரை பதித்துள்ளனர். நம் தமிழகத்தை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு உயரம் தாண்டுவதில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார் மழை பெய்ததால் தங்கப்பதக்கத்தை கை நழுவ விட்டதாகவும், அடுத்த முறை தான் தங்கப் பதக்கம் வெல்வேன் என நம்பிக்கையுடன் பேட்டியில் கூறியது குறிப்பிடத்தக்கது .சுமீத் அன்டில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் தங்கம் வென்றார். அதேபோல் பிரமோத் பகத் மற்றும் கிருஷ்ணா நஜர் இறகுப் பந்து போட்டியில் தனித்தனியாக தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர் என்பது தரணி போற்றும் செய்கை ஆகும். மனின்நர்வாய் ஆண்களுக்கான பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டியில் 30 மீட்டர் தொலைவு நோக்கி சுடுதலில் தங்கப் பதக்கம் பெற்றார் .யோகேஷ் தட்டெறிதல் வெள்ளிப்பதக்கமும் நிதிஷ்குமார் உயரத் தாண்டுதலில் வெள்ளியும் பிரவீன்குமார் தாண்டுதலில் வெற்றியும் பெற்றனர் .தேவேந்திரன் ஜஜாரியா தட்டு எறிதலில் வெள்ளி பெற்றார். ஐ.ஏ.எஸ் அதிகாரியான சுகாஸ் யதிராஜ் சிறகுப்பந்து போட்டியில் அபாரமாக ஆடி வெள்ளிப் பதக்கம் தட்டிச்சென்றுள்ளார் .பெண்களுக்கான டேபிள் டென்னிஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றது அரியதொரு சாதனையாக பேசப்படுகிறது .வில்வித்தையில் பாரதத்தை பார்முழுதும் பாராட்டும் இடத்திற்கு கொண்டு வந்தார் சுந்தர்சிங். ஆண்களுக்கான வட்டு எறிதலில் வெண்கலம் பெற்று பெருமை சேர்த்துள்ளார். இம்முறை இந்தியா 13 பதக்கங்களை வென்று இருக்கின்றோம் என்பதை நமது பாரதப் பிரதமர் மிகவும் பாராட்டி அனைவரிடமும் தனித்தனியாக மகிழ்ச்சி தெரிவித்தார்.*



*அவனி லெகரா பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் உலக அளவில் ஒரே போட்டியில் இரண்டு மெடல்கள் பெற்ற பெண் என்பதும் பெருமைக்குரிய சாதனையாகும் .இருபது வயது நிரம்பியவர் 2015 முதல் தான் சுடுதலில் வெற்றி பெறத் தொடங்கியுள்ளார். 2012-இல் 11 வயது நிரம்பிய பொழுது கார் விபத்தில் இரு கால்களும் செயலிழந்த நிலையில் தந்தையின் தூண்டுதலில் பாராஒலிம்பிக்கில் சாதனை செய்யும் செயல்வீரர் என்றும் காட்டியுள்ளார் . அதுமட்டுமின்றி ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த இவர் சட்டமும் பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. ஹரியானா மாநிலத்தில் 1982-இல் பிறந்தவர் 30 வயது நிரம்பிய இவர் துப்பாக்கி சுடுதலில் இரண்டு பதக்கங்கள் பெற்றவர். மிகவும் எளிய விவசாய குடும்பத்தில் இளம்பிள்ளை வாதம் வந்ததில் இரண்டு கால்களும் செயலிழந்த நிலையிலும் மனைவியின் ஊக்கத்தில் உலகப்பெயர் பெற்றிருக்கிறார்.*

*1960 ஆம் ஆண்டு பாரா ஒலிம்பிக் போட்டி ரோம் நகரில் தொடங்கியது.4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இப்போட்டி 2025 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பாரீசில் , மொத்தமுள்ள 22 போட்டிகளிலும் இந்திய வீரர்கள் கலந்து வெல்ல முயற்சியையும் - பயிற்சியையும் தொய்வின்றி தொடர வேண்டும்.*

*'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றி தாழாது உஞற்றுபவர்' என்ற அருங்குறள் வழியில் வாகை சூடிய வீரர்களை வாழ்த்துவோம்.*



93

ஆத்திசூடி | ATTISUDI | آتي سودي| 阿媞邱立 |

| ആത്തി ചൂടി | आत्तिचूड़ी | ఆత్తిఘూడి | ಆಭೂಡಿ



மெல் இல் நல்லாள் தோள் சேர்
Marry a girl of soft nature
لا تكسل
娶嫁柔性女子
സൽസ്വഭാവിയായ പെണ്ണിനെ വിവാഹം കഴിക്കുക
शांत कोमल स्वभाववाली अपनी गृहिणी के ही संग रहें।
మృదువైన స్వభావము కలిగిన కన్యను వివాహమాడు
ಮೃದುವಾದ ಸ್ವಭಾವವನ್ನ ಕಲಿಗಿರುವಂತ ಹುಡುಗಿಯನ್ನ ಮದುವೆಯಾಗು



பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்

பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே - பிச்சை

ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை

ஏய்ப்போருக் கேவல் செய்யுங் காலமும் போச்சே!



முனைவர் ந.அருள்,
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை

# இரட்டைக் குழல் துப்பாக்கிகள்

இருபதாம் நூற்றாண்டில் தமிழகம் கண்ட இணையற்ற இரு பெரும் தலைவர்கள் தமிழினத் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் ஆவார்கள். தந்தை பெரியார் தன்மான இயக்க வாயிலாக மக்களிடையே பகுத்தறிவு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பிறவியினால் மக்களிடையே உயர்வு தாழ்வு உண்டு என்ற கண் மூடிக் கொள்கையை உடைப்பதற்கும், மூடநம்பிக்கையின் முடைநாற்றத்தைப் போக்கவும், தீண்டாமையை முற்றிலுமாக ஒழிக்கவும், பள்ளிகளில் இலவசக் கல்வியை வலியுறுத்தவும், வகுப்புவாத வேற்றுமைகளை அறவே ஒழிக்கவும் - அரும்பாடுபட்டு ஓங்கிய குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் என்றால் அவருக்கு உறுதுணையாகவும் பக்கபலமாகவும் நின்று திமுக இயக்கத்தையும் , ஆட்சியையும் உருவாக்கித் தமிழகத்தின் முதலமைச்சராகவும் கோலோச்சியவர் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்.



"பெரியார்" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனால் பாராட்டுப் பெற்ற ஈ.வே.இரா அவர்கள் ஈரோட்டில் 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 இல் திரு வெங்கட்ட நாயக்கருக்கும், சின்ன தாயிக்கும் மகனாகப் பிறந்தவர். வைக்கம் ஆலய நுழைவுப் போராட்டம் மிகவும் புகழ் வாய்ந்ததாக வரலாறு போற்றும் செயலாகும். 1925-இல் காங்கிரசிலிருந்து வெளிவந்து நீதிக் கட்சியில் இணைந்தது ஒரு திருப்புமுனை எனக் கூறலாம். அதேபோன்று தமிழக அரசியலில் மிக முக்கியத் திருப்புமுனை என்பது 1949 இல் அறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் திராவிடர் கழகத்திலிருந்து விலகித் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்தது எனக் கூறலாம்.

1939-இல் நீதிக்கட்சியின் தலைவரான பெரியார், 1944 இல் கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என மாற்றி அமைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் 1909 இல் செப்டம்பர் 15 இல் திரு. நடராசனுக்கும் திருமதி. பங்காரு அம்மாளுக்கும் அருமந்த மகனாகப் பிறந்தார். பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை பட்டம் பெற்ற போதே மிகச் சிறந்த சொற்பொழிவாளராக அறியப்பட்டவர். 1935ல் தந்தை பெரியார் அவர்களின் முழு நேர அரசியல் தொண்டர் ஆனார். சுயமரியாதை இயக்கத்தின் உண்மையான ஆற்றல் மிக்க தொண்டரானார் .

1816 இல் ஃபிரான்சிஸ் ஒயிட் எல்லீசு என்ற ஆங்கில ஆட்சியர் உதவியாலும், அறிஞர் கால்டுவெல் அவர்களின் கடுமையான உழைப்பினாலும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வரையறுக்கப்பட்டது. 1905 ஆம் ஆண்டுகளில் தமிழ்த்தாத்தா உ.வே. சா தமிழ் இலக்கியங்களை மீட்டெடுத்து மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்தார். தமிழாய்ந்த சொற்பொழிவுகளால் பேரறிஞர் அண்ணா அன்றைய இளைஞர்களை ஈர்த்தார். அண்ணாவின் எழுத்து வன்மையும், சொல் திறனும், அன்பு உள்ளமும் அனைவரையும் உடன்பிறந்த பரிவோடு அழைத்துச் சென்றதும் ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கியது. 1949-ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாள் பெரியார் தன் 71-ஆம் வயதில் மணியம்மையை மணந்து கொண்டதனால், அண்ணா தன் தோழர்களுடன் தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து தி.மு.க.வைத் தொடங்கினார்.

பெரியார் பிறந்த நாள் அன்று 1949 இல் திராவிட முன்னேற்ற கழகத்தை நிறுவினார். 1967 இல் அண்ணாவின் மொழிக்கொள்கையும், முன்னேற்ற முயற்சிகளும் சேர்ந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

பெரியார்-கேட்டார் பிணிக்கும் தகையவாய் மேடைகளில் பேசுவார்.

அண்ணா-கேளாதோர் வேட்பவும் மொழிவார்.



“கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ” என்ற அரிய நெறிகளை அண்ணா எடுத்துக் காட்டினார். தமிழக முதல்வரான இரண்டு ஆண்டுகளிலேயே 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் உடல் நலிவால் மறைந்தார். பெரியார் தன் 94 ஆம் வயதில் திசம்பர் 24 ஆம் நாள் 1973 ஆம் ஆண்டு காலமானார்.

அண்ணா கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் தந்தை பெரியார் மட்டும் தான். 10.10.1968-இல் அமெரிக்கவிலிருந்து தந்தை பெரியாருக்கு எழுதிய கடிதமொன்றில் எழுதிய வரிகள் வரலாற்று வரிகளாகும். “ தங்கள் பணி, மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமூகத்தில் அளித்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்தவரையில் இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை ” என்ற பொன்வரிகளை உரமேற்றும் வகையில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் பிறந்த நாளாள செப்டம்பர் 17 ஆம் நாளை சமூக நீதி நாளாகக் கொண்டாடுமாறு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அண்மையில் அறிவித்துள்ளார். இது மாபெரும் எழுச்சி தருவது .

தலைவர்கள் இருவரும் அடித்தளமிட்ட சமூகச் சீர்திருத்தங்கள் தமிழகத்தில் என்றென்றும் நிலைத்து நின்று இன்றைய ஓங்கி ஒளிரும் தமிழகத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. செந்தமிழ்ச் சொல்லால், செயலால், தடைகளைத் தகர்த்தெறியும் தடந்தோளால் தொடங்குக பணியை என ஊக்கமும் உரமும் ஊட்டிய இவ்விரு தலைவர்களின் பாதையில் தமிழகம் என்றென்றும் செழித்து நிற்கும் என்பது திண்ணம் !.

வாழ்க தமிழ் !

வெல்க தமிழகம் !!



முனைவர் சோமலெ சோமசுந்தரம்
அமெரிக்கா

79

## உப்பு மிட்டாய்!

நியூ ஜெர்சி மாநிலத்தின் கடற்கரை நகரங்களில் புகழ் பெற்றது அட்லாண்டிக் சிட்டி. சூதாட்டத்திற்கான கேளிக்கை விடுதிகள் (casinos) நிறைந்த அங்கு "தாஜ் மஹால்" என்ற பெயரில் டானால்டு டிரம்ப் நடத்திய கேளிக்கை விடுதி இப்போது வேறு பெயரில் இயங்கி வருகிறது. கடற்கரையை ஒட்டிய கடைகள் என்றால் சாலையோரத்தில் உள்ள தள்ளு வண்டிகள் என்று எண்ணி வருவோ ருக்கு அட்லாண்டிக் சிட்டி கடற்கரையில் உள்ள உலகத்தின் மிக நீளமான 5.5 மைல் "மர நடை பாதை" (Board Walk) வியப்பாகவே இருக்கும்.



அருகே உள்ள தங்கும் விடுதிகளிலும், பயணிகள் தொடர் வண்டி (ரயில்) களிலும், கடல் மண் குமிவதைத் தடுக்கக் கட்டப்பட்டது இந்த மர நடை பாதை. இங்கு வருவோரின் கால்கள் அட்லாண்டிக் கடல் நீரிலோ அல்லது கடல் மண்ணிலோ படுகிறதோ இல்லையோ அந்த மர நடை பாதையில் பாத யாத்திரை செய்யாமல் வீடு திரும்புவதில்லை! அதற்குக் காரணம் அதன் அருகில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட கடைகளும், விளையாட்டு மற்றும் கேளிக்கை மையங்களுமே.

திருநெல்வேலி அல்வா, மணப்பாறை முறுக்கு, சேலம் மாம்பழம் போன்று அட்லாண்டிக் சிட்டி உப்புத் தண்ணீர் மிட்டாய் (salt water taffy) பிரபலமானது.



கடலோரத்தில் விற்கப்படுவதால் கடல் நீரைப் பயன்படுத்தி செய்யப்படும் மிட்டாய்கள் என நினைப்பது இயல்பே. உப்புத் தண்ணீர் இல்லாத அந்த மிட்டாயில் உப்பும், தண்ணீரும், சர்க்கரையும், சோளப் பாகும் உள்ளன.

## அறிவியலின் உறைவிடம்!

உலகின் முன்னோடி விஞ்ஞானிகளான தாமஸ் ஆல்வா எடிசன், ஆல்பர்ட் எய்ன்ஸ்ட்டின் போன்றோர் பல்லாண்டுகள் வாழ்ந்த மண் நியூ ஜெர்சி. எய்ன்ஸ்ட்டின் வாழ்ந்த 112, மெர்சிர் தெரு



இல்லத்திற்கு இந்தியாவின் முதல் பிரதமராக இருந்தபோது ஜவாஹர்லால் நேரு தன் மகள் இந்திரா காந்தியுடன் வந்து எய்ன்ஸ்ட்டினைச் சந்தித்தார்.

**"மெர்சிர்,**
**ஐன்ஸ்டைன் என்ற மனிதன்**
**நடந்த வீதியல்ல**
**விஞ்ஞானம் நடந்த வீதி!"**

என "உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்... வால்ட் விட்மன்!" என்ற அமெரிக்கப் பயணக் கவிதை நூலில் குறிப்பிடுகிறார் பெருங்கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

மென்லோ பார்க் என்கிற பகுதியில் இருந்த எடிசனின் ஆராய்ச்சி ஆய்வகம் உலகின் முதல் ஒளிரும் விளக்கு உட்பட பல அறிவியல் கண்டுபிடிப்புகளின் தாயகமாக விளங்கியதை 13 அடி உயரமும், 8,000 கிலோ எடையும் கொண்ட ஒளிரும் விளக்கு அமைந்துள்ள கோபுரம் நினைவூட்டுகிறது.



எடிசன் மறைந்து தொண்ணூறு ஆண்டுகள் ஆகிவிட்டாலும் பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகள் என்ற அறிவியல் பயணம் நியூ ஜெர்சியில் தொடர்கிறது. காற்றுப் பதனாக்கி (air conditioner), குளோரின் வாயுவுடன் நீரை சுத்தப்படுத்தும் முறை, முதல் உதவிக்கு பயன்படும் (band-aid) நாம் வாங்கும் பல பொருள்களின் கட்டுகளில் உள்ள பட்டைக் குறி (bar code) ஆகியவற்றை உலகிற்கு வழங்கியுள்ளது நியூ ஜெர்சி மாநிலம்.

### உங்கள் ஊரில் மணி என்ன?

இந்தியாவில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எங்கும் ஒரே நேரம் தான். ஸ்ரீநகரில் காலை எட்டு மணி என்றால் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் காலை எட்டு மணி. அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் மதியம் ஒரு மணி ஆகும் போது, அலாஸ்காவில் இரண்டு மணி, கலிஃபோர்னியாவில் மூன்று மணி, டென்வரில் மாலை நான்கு மணி, சிகாகோவில் ஐந்து மணி, நியூ யார்க்கில் ஆறு மணி என ஆறு நேர மண்டலங்கள் (time zones) அமெரிக்காவில் உள்ளன. "ஒரே நாட்டில் இத்தனை நேர மண்டலங்களா?" என்று எண்ணுபவர்கள் இங்கு 1800-களில் வாழ்ந்திருக்க வேண்டும்! வட அமெரிக்காவில் 144 நேர மண்டலங்கள் இருந்த காலம் அது. அருகில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் சிறு சிறு நேர வித்தியாசம் இருந்ததாம். நத்தை வேகத்தில் பயணம் செய்த காலமாகையால் அந்த வித்தியாசங்களை யாரும் பொருட்படுத்தவில்லையாம்.

1883-இல் உள்நாட்டு தொடர் வண்டி போக்குவரத்து அதிகரித்தது. தம் கடிகாரங்கள் வெவ்வேறு நேரத்தைக் காட்டியதால் ஒரே நேரத்தில் இரண்டு தொடர் வண்டிகள் மோதிக்கொண்டன. அது போன்ற விபத்துக்களைத் தவிர்க்க,144 நேர மண்டலங்களை, தற்போது பயன்படுத்தப்படும் ஆறு மண்டலங்களாக சீரமைத்தவர் **நியூ ஜெர்சி மாநிலத்தில் ரயில்வே பொறியாளராகப் பணியாற்றிய வில்லியம் ஆலன்..**

செவ்வாய்க்கிழமை பிறந்த நாளை ஞாயிற்றுக் கிழமை கொண்டாடுவதும், அதிபர்கள் தினம், போர்களில் உயிர் தியாகம் செய்தோருக்கான நினைவு நாள் (Memorial Day), தொழிலாளர்கள் தினம் போன்ற அரசு விடுமுறைகளை (தொடர்ந்து மூன்று நாள் விடுமுறைக்காக) திங்கள் கிழமையன்றே அனுசரித்தும், வசதிக்காக வாழ்வை மாற்றிக்கொள்பவர்கள் அமெரிக்கர்கள். அது போன்றே, ஆண்டு தோறும் வருடத்திற்கு இரண்டு முறை கடிகாரத்தில் உள்ள நேரத்தையே மாற்றிக்கொள்ளும் நாடு அமெரிக்கா!

மார்ச் மாதம் இரண்டாவது ஞாயிறு நள்ளிரவு 1:59 மணிக்குப் பிறகு கடிகாரங்கள் இரண்டு மணியைக் காட்டாமல், ஒரு மணிநேரம் குதித்து (Spring Forward) மூன்று மணியைக் காட்டுகின்றன. அதே கடிகாரங்கள் நவம்பர் மாதம் முதல் ஞாயிறு நள்ளிரவு 1:59 மணிக்குப் பிறகு இரண்டு மணியைக் காட்டாமல் பின்னோக்கிச் சென்று (Fall back) 1:00 மணியைக் காட்டுகின்றன

முதல் உலகப்போரின் போது ஏற்பட்ட நிலக்கரிப் பற்றாக்குறையால் நிலக்கரி, மின்சாரம் போன்ற எரிசக்திகளை சேமிக்கும் நோக்கத்தோடு, வசந்த காலம் (Spring) முதல் இலையுதிர் காலம் (Fall) வரை இயற்கையான பகல் வெளிச்சத்தை முழுமையாகப் பயன்படுத்தவே இந்த "நேரத்தை மாற்றும் பழக்கம்" ஜெர்மனியில் தொடங்கியது. குளிர் காலத்தைத் தவிர மற்ற மாதங்களில், பகல் வேளையில் வெளிச்சம் ஒரு மணி நேரம் அதிகமாகக் கிடைப்பதால், வெளியில் அதிகம் இருக்க விரும்பும் அமெரிக்கர்கள் தம் வசதிக்காக வருடத்திற்கு இரண்டு முறை நேரத்தை மாற்றிக் கொள் கிறார்கள்.

**பயணம் தொடரும்**





## சொல் வரிசை

- சுருங்கக் கூறி விளங்க வைக்கும் முதுமொழி *(Aphorism)*
- மறைமுகமாகக் குறிப்பிடுதல் *(Allusion),*
- மோனைத் தொடை *(Alliteration)*
- அந்தாதித் தொடை *(Anaphora)*
- சொல்வரிசைகளைத் தலைகீழாக மாற்றிக் கூறல்*(Anastrophe)*
- உருவகக் கதை *(Allegory)*
- இரட்டுற மொழிதல் *(Amphibologia)*
- முடிவு விழைவதைக் குறிப்பிடும் சொல்லணி *(Anacoenosis)*
- ஆரவார மொழி *(Bombast)*
- கவிதையின் இயற்கையான ஒலி நிறுத்தம் *(Caesura)*
- அடைமொழி *(Epithet)*
- ஒருசொல் பன்மொழி *(Equivocation)*
- உயர்வு நவிற்சி *(Hyperbole)*
- முரண் தொடை *(Irony)*
- குறைவு நவிற்சி *(Litotes),*
- பொருள் ஆகுபெயர்*(Metonymy)*
- உருவகம் *(Metaphor)*
- நகைப்புண்டாக்கும் சொல் குளறுபடி *(Malapropism)*
- புதிய சொல், சொற்றொடர் ஆக்கம் *(Neologism)*
- சொல் முரணணி *(Oxymoron)*
- முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரை *(Paradox)*
- இருசொல் இயைபணி *(Parallelism)*





உரைவேந்தர் ஔவை துரைசாமி



பண்டைத் தமிழ் வேந்தன் தன்னாட் சிக்குட்பட்ட நாடு தனக்கேயுரிய தென்றும், தன் கீழ் வாழ்வார் நாட்டில் விளைந்து வரும் வருவாயில் ஒரு பகுதியைத் தரக் கடமைப் பட்டவரென்றும் கருதினான். மக்கள் தன் நிலத்தே விளைவன விளைத்து ஈட்டுவன ஈட்டி நுகர்வன நுகர்ந்து உடலோடு கூடி உயிர் வாழ்தற் பொருட்டுத் தங்குவதற் காகத் தரப்படும் தங்குகூலி (வாடகை) யென்று கூடப் பொருள் படுமாறு குடிகள் இறுத்த இறை அக்காலத்தில் அமைந்திருந்தது. இறை யென்பதற்குத் தங்குதல் என்பதும் பொரு ளாகும். இதனால் குடிகள் விளைக்கும் பொருள் தனக்குரிய வருவாயா தலால், ' அது குன்றாத வண்ணம் குடிகளையும் விளை புலங்களையும் காப்பது அரசியல் முறை யென்று பண்டையரசன் நினைந்தொழு கினான். அதனால் கல்வியறிவு பெறுதல் மக்கள் பொறுப்பாயிற்று.

"வலியுடை வேந்தர்க்கே நிலவுலகம் உரி யது" என்ற கொள்கை சங்க கால வேந்தர் உள் ளக்தே குடிகொண்டிருந்தது. வலி குறைந்த வேந்தன், அறிவால் ஆராய்ந்து, "இந்நிலம் வேந்தர் படைப்பன்று; கடவுள் படைப்பு; நலஞ் செய்தார்க்கு இன்பமும் தீமை செய் தார்க்குத் துன்பமும் உண்டாகுமாறு செய்யும் கடவுள் போல, நில வேந்தர் குடிகளின்



குறை நீக்கி முறை செய்து நல்லோர்க்கு அளியும் தீயோர்க்குத் தெறலும் வழங்குவது முறை; அதனால் இந் நிலம் எல்லா வேந்தர்க்கும் பொது" என்று கூறுவது முண்டு. வலியுடை வேந்தன் "பொதுச்சொல் பொறாது" போர் உடற்றி வலி குறைந்த மன்னனது நாட்டைத், தன் அடிப்படுத்தினான். நிலம் சூழ்ந்த கடல் மக்கள் வாழ்தற் குரிய இடமா காதாயினும், கலத்திற் சென்று வேற்று நாடு களிலிருந்து பொருள் கொணர்ந்தீட்டுதற்கு வாயிலாத லால், அதுவும் பொதுவாகாது என அதன்மேலும் தன் ஆணை செலுத்தின தமிழ் வேந்தரும் உண்டு. "சினமிகு தானை வானவன் குடகடல், பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப், பிறர் கலம்' செல்கலாது' என்று சான்றோர் கூறுவது காண்க.

**வளரும்...**



# ஆங்கிலம் அரும்பிய அரசும் - வாழ்வும்... !

வழக்கியல் வல்லுநர் செந்தமிழ்த்திலகம்
திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா, இலண்டன் மாநகரம்

35

## தோமஸ் பெக்கெற் கொலை

இங்கிலாந்தின் வரலாற்றில் தோமஸ் பெக்கெற் (Saint Thomas Becket) என்பவர் மிக முக்கியமானவர். 1117 ஆம் ஆண்டில் பிறந்த அவர், 1170 ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இரண்டாம் என்றி மன்னனைப் பற்றி இதற்கு முன்னர் படித் திருக்கிறோம். அவனுக்கும் Thomas Becket என்பவருக் கும் இடையில் ஏற்பட்ட மோதல், Becket இன் உயிரையே பறிக்கின்ற அளவுக்கு மோசமானதாக இருந்தது.




தொடக்கத்தில் Becket அவர்கள் இரண்டாம் என்றியின் நண்பராகவே இருந்தார். அத் துடன் அமைச்சரவையிலும் அங்கம் வகித்தார். எட்டு ஆண்டுகளாக Becket அவர்கள் இடாம்பீகமான வாழ்வு வாழ்ந்தார்.

கிறித்தவ மதத்தாபனம் அடிக்கடி அரசாங்கச் செயற்பாடுகளில் தலையிட்டதை இரண்டாம் என்றியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்தப் போக்கைத் தடுக்கின்ற வகையில், Becket அவர்களைக் Canterbury தேவாலயத்தின் அதிமேற்றிராணியாக (Archbishop) நியமித்தால் நிலைமை சரியாகும் என்று என்றி நம்பினான். நம்பியபடியே நியமித்தான்.



ஆனால் அந்த நியமனம் Becket அவர்களின் மனநிலையில் ஒருவிதத் திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியது. நியமனம் பெற்ற நாளிலிருந்து அவர் ஒரு பக்தனாகவும், துறவியாகவும் மாறத்தொடங்கினார். அவரது மனம் பாவவிமோசனத்துக்கான செயற்பாடுகளில் இறங்கியது. அவருடைய விசுவாசம் இப்போது கிறித்தவ மத நிறுவனத்துக்குச் சார்பாகச் சரிந்தது.

**வளரும்...**





History, the Tamil people studied Tamil much, for their monarchs encouraged its learning in every way. All the varied forms of literature written in pure Tamil prior to the twelfth century A.D., bear ample testimony to the great literary activity of the Tamils and the vast extent of culture they had acquired in almost every branch of learning. Entire absence from old Tamil literature of all mythical, romantic, libidinous and indecent accounts about Gods and sages which constitute an essential feature of Sanskrit works, indicates the highly developed sense which the Tamilians had of the naked moral truth. But from this sense of truth came a fall, the moment the Arya brahmins came from the north bringing with them and popularizing here lengendary tales about Gods and rishis, as an easy means of catching the fancy of the people and bringing them completely under their control. Since these brahmins had been very selfish, greedy and cunning, they did their best to keep the people in ignorance and illiteracy, so that they might always be sought after by the people for any enlightenment they were in need of.

Sanskrit they called the language of God, and the brahmins the gods on earth. The people were forbidden to learn anything in general and Sanskrit in particular from the injunctions of the priests should bring about the ruin not only themselves but of their whole family and relations as well. These brahmins did not scruple to show from the Sanskrit books that the injunctions found in them were laid down by the Gods themselves, while in fact,



they were their own, fabricated in the name of Gods simply to intimidate the credulous people. As time went on the influence of the northern brahmins penetrated to the very core of the Tamilian society, that many, stationed high among them discharging priestly and educative functions, began to feel the secret power of the northern cult and with a view to raise themselves still higher in the estimation of their own people, gradually isolated themselves from their society and identified themselves with the northerners and their own interests with theirs, to so great an extent that they gave up completely the study of Tamil, thinking that it would sink them to the level of the people, took up that of Sanskrit to make themselves mysterious and god-like in the eyes of the masses.

**To Continue...**



# தமிழக அரசின் பாராட்டுப் பரிசாளர் !

## வீரமாமுனிவர் விருது





| வ.எண். | ஆண்டு | பெயர் |
|---|---|---|
| 1 | 2020 | முனைவர் கிரிகோரிஜேம்சு |

## HIS POPULARITY

**The** erstwhile slumbering Congress giant Mr. K. Kamaraj on the one hand and the congress (R) politicians on the other led by Messrs. M. Bhakthavatsalam and C. Subramaniam on the other are of late mounting their mighty and monstrous attacks against Dr. Karunanidhi and his D.M.K. Government. They show no mercy and seek none. Theirs is an all-out attack, though from different directions and camps. Cannon to the right of him cannon to the left of him and cannon in front of him volley and thunder. But the Chief Minister is calm and serene and Janus-faced repels the attacks with rare courage and rapier thrusts simultaneously. Nay, he indefatigably carries the battle into the enemies' camps and devaste and destroy their forts of feeble cards.

“Calm and serene, he drives the furious blast

And pleased the Almighty's orders to perform,




Despite it all and despite even the desperate determination of the “demi-god" of a Rajaji to dethrone him, Dr. Karunanidhi is the most democratic leader who is now, as always before, the darling of the masses and the delightful idol of the millions of the plebeians in Tamilnadu. I cannot do better than quote the following passages which describe the popularity of Karunanidhi in the most picturesque manner :

*"They more or else came in with cap and knee, Met him in boroughs, cities, villages, Attended him on bridges, stood on lanes, Laid gifts before him, proffered him their oaths, Gave him their heirs, as pages followed him, Even at his hands in golden multitudes”'*

*-Shakespeare.*

**To Continue...**



# சிலப்பதிகாரம் - ஆங்கிலம் !

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழக அரசு

60

## Madurai- Canto-12- Vettuvars Worship



Tudi, Horns blare loud! In sore
night Killer tiger like marava
swear by thy feet and score.
Artery spouts blood,Accept, Ma
Eat Up the Food We Offer, Ma
19

May farers and riches multiply!
Bowmen we hail You, Sankari,
Antari, cobra hood to try moon
on crest,eat our give, Neeli.
20

Ambrosial skiers too die!
Venom in grace gulp, didn't you!
Tudi's tremor.We,sack,aye,
all in sleep.Consume our due!
21



Didn't you, uproot twin arjuns,
kick a wheel sent on as ordered
by uncle evil! Hunt we at once,
grace nil! Eat our meat offered!
22

May King South Wear
Wild Geranium Reigm
23

From Vedic Siva, to Potiyil
Agastya's is Pantya's glory!
He'll ban cattle lift,win battle,
reign garlanded in Vetchi!

**To Continue...**





முனைவர் தேவி நாச்சியப்பன்

## புதிர்ப்பாடல்

பாடல் வழி எதிர்ச் சொல்லைப் பாடிய கவிஞர்கள், பொருள் விளக்கம் தரும் பாடல் களையும் பாடியுள்ளனர்.

" கழனியில் பறிப்பது களை
கையில் அணிவது வளை
கனியில் இருப்பது சுளை
காலம் நலம்பெற முளை "



சொற்களின் பொருளைக் கவிதையாக மோனை, இயைபு அமையப் பாடியுள்ளார் கவிஞர் வா.சி. தனபாலன்.

சில மாறுபட்ட புதிய உத்திகளைக் குழந்தைப் பாடல்களில் கவிஞர்கள் கையாண்டனர்.

"தா தா தா தா தா தா தா தா தா தாக்குத்
தண்ணீர் தாரான்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆக்கும்
உதவான் ! கொள்ளை
லா லா லா லா லா லா லா லா லா லாக்கேப்
பொருளை விற்பான்
பா பா பா பா பா பா பா பா பா பாக்கே
ஆளாவானே ! "



என்ற பாடலைப் படித்த குழந்தை இது என்ன புதிர் போல் உள்ளதே என நினைக்கும்.

சற்று யோசித்தால் விடையைக் கண்டு பிடித்துவிடலாம்.

வளரும்...

**He** must have the maturity not only to accept facts, but to explain their inner meaning.

One who has argued that 'there is no God' has not been able to argue that there is no death for him'.

The noted atheists whom I have known have accepted God on the death beds.

Matured persons have accepted that great truth while living itself.



Now I have the clearness to distinguish between the genuine and the false.

They reached that state because of the good they had done in their previous birth.

Others attain that state of maturity at the cost of experience.

The Egyptian King Farook only realized 'human nature' when he had lost his name and fame.



But, we have the history of Gautama Buddha in our country who reached it in his very palatial surroundings.

Maturity' is the full ripening state laden with experience.

In that state a refusal, a sheer 'no' never occurs.

Might be' is the only thing one wishes to utter in that state, Any fool can say 'no' easily.

But a man who says 'yes' needs intelligence to prove it.



## திருநாவுக்கரசர்



செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களுடன் சூரியன், சந்திரன், ஆன்மா என மூன்று அங்கங்களையும் இணைந்து அட்ட மூர்த்திகளாகக் கொள்வர்.

இறைவன் இங்கு அனைத்து நிலைகளி லும் திகழ்கிறார் எனத் திருநாவுக்கரசர் பாடலில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.






நீரின் சக்தியை இன்றைய அறிவியலின் வாயிலாகவும் நாம் உணர்கிறோம். நீர் உயிர் வாழ்தலுக்கு இன்றிமையாதது. நீர் உடல் தூய்மைக்கு முக்கியம். நீர்வளம் இல்லை யேல் தானம் தவம் இரண்டும் தங்கா என்பது திருவள்ளுவர் வாக்கு.

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆடும் தீர்த்தன் என்பது மாணிக்கவாசகர் சொன்ன மந்திரம். நீரின்றி அமையாது உலகு என்பதனால் இத்தலத்தில் இறை வனை அப்பர் பெருமான் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம் அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை எனக் கூறுகிறார்.

திருவதிகை என்ற ஊர் திருவாரூருக்கு அருகில் இருக்கிறது அக்கால தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு மேற்கில் 34 கல் தூரத்தில் உள்ளது இப்பதிகத்தின் பாடல் படிப்பவர் அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும்.

**வளரும்...**





**திருப்பூர் கிருஷ்ணன்**



**வ**.சுப.வின் புரட்சி மண்டோதரியைப் படிக்கும் போது அவர் கூறும் இராவணனின் மனநிலை குறித்த உவமைகள் கம்பரின் இந்தப் பாடலில் வரும் சொல்லடுக்குகளை ஒப்பிட்டுப் பார்த்து நம்மை மகிழத் தூண்டுகின்றன.

`மாணிக்கக் குறள்` என்ற கவிதை நூலில் வ.சுப.மா. தமிழுக்குக் கையாண்டிருக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நயமான அடைமொழிகள் பற்றி என்ன சொல்ல! `குளிர்தமிழ், பழுத்த தமிழ், கனிதமிழ்` என்றெல்லாம் தமிழைக் கொஞ்சுகிறார் அவர்.

அவற்றைப் படிக்கும்போது, `தமிழுக்கும் அமுதென்று பேர்` என்ற பாரதிதாசன் கவிதையும் கூடவே நம் மனத்தில் எழுந்து நம்மை மகிழ வைக்கின்றன.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் கூடாது என்னும் கொள்கையில் இறுதிவரை உறுதியாக நின்றவர் வ.சுப.மா.. நா.பா. எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிதில் அதைக் கடுமையாக எதிர்த்தார். செருப்புக்காகக் காலை வெட்டலாமா எனக் கேட்டுத் துக்ளக் பத்திரிகையில் கட்டுரை எழுதினார். ஆனால் பின்னர் எழுத்துச் சீர்திருத்தத்தின் இன்றியமையாமையை உணர்ந்து அவரே அதை ஏற்றார்.

கி.ஆ.பெ. விசுவநாதன் கடைசி வரை எழுத்துச் சீர்திருத்தத்தின் கடும் எதிர்ப்பாளராகவே இருந்தார். ஐராவதம் மகாதேவன், வா.செ. குழந்தைசாமி போன்ற சில பிரமுகர்கள் தொடக்கத்திலிருந்தே அதை ஆதரித்தார்கள்.

| முன்பு | தற்பொழுது |
|---|---|
| ணா | ணா |
| றா | றா |
| னா | னா |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| னை | னை |

கணிப்பொறிக்குச் சீர்திருத்த எழுத்து சுலபமாய்ப் பொருந்தக் கூடியது என்பது இன்று நிரூபணமாகியிருக்கும் ஓர் அறிவியல் உண்மை. இன்று கணிப்பொறித் துறை மிகப் பெரிதாக வளர்ந்து எல்லாத் துறைகளையும் ஆக்கிரமித்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் வ.சுப.மா. இப்போது இருந்தால் முற்போக்குச் சிந்தனைகள் உடைய அவர், எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடுமையாக எதிர்ப்பாரா என்பது ஒரு கேள்விக் குறியே?

**வளரும்...**



## 3

### கலைமாமணி டாக்டர் இரா.குமரவேலன்

கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாகத் தொல்காப்பிய உரைப்பதிப்புகள் வெளி வந்து தமிழ் மக்களின் நெஞ்சில் இடம்பெற்றன. இந்தப் பதிப்பு வரலாற்றை ஆசிரியர் தம் நூலின் முதல் இயலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொல்காப்பிய முதல் பதிப்பு 1848ஆம் ஆண்டு மழவை மகாலிங்கையரால் கொண்டுவரப்பட்டது. அன்று தொடங்கி மூலமும் உரையுமாகத் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களும் பகுதிப்பகுதி யாகவும், முழுமையாகவும், பற்பலப் பதிப் புகள் வெளிவந்துள்ளன. ஒப்பற்ற இலக்கண நூலின் பதிப்பு வரலாற்றை ஆய்வாளர் மிகச் சுருக்கமாக இந்நூலின் முதற் பகுதியில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சாமுவேல் பிள்ளை, புன்னை வனநாத முதலியார், தி.சு.பாலசுந்தரம் பிள்ளை, வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பராய செட்டியார், கா.நமச்சிவாய முதலியார், வையாபுரிப் பிள்ளை முதலானோரின் அரும்பணிகளை நூலாசிரியர் மறவாமல் பதிவு செய்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

இளம்பூரணர் யார், அவர் காலம் எது, அவர் நாடும் மரபும் சமயமும் யாவை, அவர் துறவியா இல்லறத்தவரா, உரையாசிரியர் எனப்படுபவர் இவரா அவர் அறிவு நலம்




எத்தகையது எனப் பற்பல வினாக்களை எழுப்பி ஆராய்ந்து, கற்பார் உள்ளங் கொள்ளுமாறு முடிவுகளைத் தேடித் தொகுத்துத் தந்துள்ள பகுதி ஆசிரியர் ஆய்வுத் தேடலில் கொண்டுள்ள ஆர்வத்தை இனிது வெளிப்படுத்துகிறது.

எழுவருள் முன்னவர் இளம்பூரணர் எனில் அவர்தம் உரைநெறிக்கு வழிகோலி யவர் யாராக இருக்கக்கூடும் என்னும் ஆசிரியரின் ஆய்வு இங்குக் குறிக்கத்தக் கது. வரிவடிவ உரை தோன்றுவதன் முன் சொல்லுரை மரபு இருந்த பாங்கினைச் சுட்டிக் காட்டும் ஆசிரியர், இளம் பூரணருக்கு முன் விளங்கிய இறையனார் அகப்பொருளுரைகாரரையும், யாப்பருங்கல விருத்தி உரைகாரரையும் நினைவுகூர் கிறார்.

**வளரும்...**



பேராசிரியர் வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

2

அனைத்துத் துறைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளார். உலகின் தொன்மைக் குடியான தமிழ்க் குடியின் பெருமையினை உலகறியச் செய்ய மேலும் அகழ்வாய்வுகள் தொடர்ந்து நிகழும் என தெரிவித்துள்ளார். கீழடி அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள அரும்பொருள்களை வைத்து உலகத் தரத்தில் அருங்காட்சியகம் வைக்கவும் திட்டமிட்டுள்ளார்.



தொல்லியல் துறையில் அறிஞராக விளங்கும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர், தொல்லியல் துறைக்கு ஐந்து கோடி நிதி ஒதுக்கியமை பெரிதும் பாராட் டத்தக்கது. கீழடி, கொந்தகை, அகரம், சிவகளை, ஆதிச்சநல்லூர் போன்ற வரலாற் றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழ் வாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

மேலும் சங்ககால வணிகத் துறை முகங்கள் கொற்கை, அழகன் குளம் போன்ற வாலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஊர்களில் கடல்சார் ஆராய்ச்சியும் அகழ் வாய்வும் நிகழ்த்தப்படும் என்ற செய்தியும், கீழடி என்ற தமிழரின் வைகைக் கரை நாகரீ கத்தினை உலகம் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் இத்தடத்தில் அமைந்துள்ள பல் வேறு நகரங்களில் அறிவில் பூர்வமான அகழ்வாய்வு ஆராய்ச்சிப் பணிகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மேலும் தமிழ் செம்மொழியாக அறிவிக் கப்பட்ட அக்டோபர் 12 நாளினை செம் மொழி திருநாளாக கொண்டாடவும் ஆணையிட்டுள்ளார். சங்கத் தமிழரின் பெருமை யினை அறிவியல் பூர்வமாக நிறுவ இந்த அரசு எடுத்துவரும் முயற்சிகள் போற்றத் தக்கவை.

வழக்காடு மொழியாக உயர்நீதி மன்றத்தில் அறிவிக்க அரசு முயற்சி செய்து வருகிறது. அயலகத் தமிழர்களுக்காக அமைச்சகம் உருவாக்கப்பட்டு, அவர் களின் நலன்களை பேணும் வகையில் செயல்களும் நடைபெற்று வருகின்றன.

வளரும்...



பெரும் பேராசிரியர் செ.இரா.செல்வகுமார்
கனடா



**வெண்பா இலக்கணத்துடன் எழுதிய சிலேடை வெண்பா.**

**“எவ்விட்டம் செம்பரிதி யாகுமென வெண்ணிதின்**


**முவூற்றம் மாண்டொரு நான்கடைய செவ்விதின்**

**ஓரைந்தின் கட்டுணர்ந்து பொள்ளுடல் ஒடு**

**ஈராறோய் நானார் தனி”**

பொழிப்புரை:

ஒரு வட்டத்தின் சுற்றளவானது அவ்வட்டத்தின் செங்குறுக்காகிய (செவ் வெட்டாகிய) விட்டத்தின் எப்பெருக்கம் ஆகும் என்று ஆய்ந்தால், அதுவானது மூன்று என்னும் முழு எண்ணைக் கடந்து, பிள்வம் ஆகிய 1, 4 ஐ அடைந்து, பிறகு






சரியாக 1, 5 ன் சேர்க்கையைப் பெற்று, பின்னர் 9, 2, 6-ஐக் கடந்து 16 ஆவது தன்யெண் (வருவதாம்) எதனை விட்டால் பேரறிவு நிலை அடையலாம் எனில், மூன்று வலிய பற்றுக்கோடாகத் தென்படும் துன்பங்களில் இருந்து விடுபட்டு நான்காவது பேரறிவு நிலை என்னும் துரிய நிலையை அடைய, கடுமையான ஐந்து புலங்களின் ஈர்ப்புகளை முற்றுமாய் உணர்ந்து, ஒன்பது துளைகளை உடைய நம் உடலங்கள் வழி நிகழும் இன்பம் துன்பம், நல்வினை, தீவினை என்னும் இருவேறு வழிகளில் இருந்து விடுபட்டு, நானார் என்னும் உள்வினவலினால் உள்கி உள்ளாய்ந்தால் பெறுவாய் தனி என்னும் விடுபட்ட பேரறிவு நிலையாகும்.

**வளரும்...**






**போ**வுல்ப் கேடிமான் காலத்தில் வழங்கிய ஆங்கில மொழி சாசர் காலத்திலும், சாசர் காலத்திய மொழி செகப் பிரியர் காலத்திலும், செகப்பிரியர் காலத்து மொழி



தேனிசையன் காலத்திலும், எத்தனை எத்தனையோ மாறுதல்களை அடைந் துள்ளன. ஆனால் தமிழ் மொழியானது கடந்த இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகவே மாறாமலும், சிதையாமலும் ஒரே நிலையிற் கன்னித்தமிழ் என்பதற்கு ஏற்ப, இன்றும் யாவர்க்கும் எளிதிற் புரியும் படியாக நிலை பெற்று நிலவி வருகின்றது.

உலக மொழிகளின் வரலாற்றில், இஃதொரு விந்தைமிக்க பெருஞ் செய்தி யாகும். பிரித்தானியக் கலைக்களஞ்சியம்' தமிழின் இவ்வியல்பைப் போற்றிக் குறிப்பிட்டுள்ளது.

ஆங்கிலம் உலகப்பெருமொழிகளுள் ஒன்றாக இன்று திகழ்கின்றதெனினும், அதன் இலக்கணம் இன்னும் போதிய திருத்தமும் செம்மையும் எய்தவில்லை என,



ஜார்ஜ் பெர்னாட்ஷா முதலிய ஆங்கில அறிஞர்கள் பலர், கூறி வருகின்றனர். ஆனால் ஏறத்தாழ மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழில் தொல் காப்பியம் என்னும் தூய சிறந்த முழு முதல் இலக்கண நூல் அமைந்திருப்பது, தமிழ் மக்களின் தவப்பேறு என்றே கூறுதல் வேண்டும். பழந்தமிழ் மக்கள் கண்டுணர்ந்து கடைப்பிடித்த நூற்பா அமைப்பு சுருங்கச் சொல்லல்-விளங்க வைத்தல்-நவின்றோர்க்கினிமை- நன் மொழிபுணர்த் தல் ஓசையுடைமை-ஆழமுடைத்தாதல் முதலிய பத்து வகை அழகுகளும் பயின்று, எத்துணை மாட்சிமை மிக்கு இலங்கு கின்றது.

**வளரும்...**



மருத்துவர் தாரா நடராசன்,
குழந்தை நோய் வல்லுநர்,
முன்னாள் முதல்வர்,
மதுரை மருத்துவக் கல்லூரி, இராசாசி மருத்துவமனை



பிஞ்சுப் பிள்ளையை இருகையால் எடுத்து ஏந்தும் முறையைத் தன் கண வனுக்குக் கூறுங்கால், பிறந்தவுடன் குழந்தையைத் தூக்குவதற்கு எல்லோரும் விரும்புவார்கள். ஆனால், கைக் குழந்தை யைத் தூக்குவது எல்லோருக்கும் எளிதல்ல என்று கூறியதோடு,

**இறுகா அமிழ்தின் இளகல் உடம்பை**
**உறுத்தாமல் தூக்க ஒரு திறம் வேண்டும்,**

என்று சொல்லி, குழந்தையின் தலை தானாக நிற்காது, ஆகையால் தலையையும் உடலையும் ஒருசேர அணைத்துப் பிடித்தால் தான் பிறந்த இளங்குழந்தையை வாய்ப்பாகத் தூக்க முடியும் என்பதை விளக்கும்.

குளநீர்த் தாமரை குழந்தையின் இளந் தலை அம்மலர்ந்தண்டே அழகிய மெல் லுடல்; தண்டுடல் மலர்த்தலை தாங் குமா? தலை, உடல், இரண்டையும் ஒருங்கு தாங்கி உலைஅமிழ்தை வறியவள் ஒருத்தி தூக்கல் போல் தவறாது தூக்கு வது தலையாய கடன் என்று கூறுவது வியப்பைத் தருகிறது.



நிறுத்துகிறார். 'சிறு குழந்தை விழியி லேயே ஒளியாய் நின்றாள்' என்று அழகு தேங்கிய இடமாகக் குழந்தையின் விழியழகைச் சுட்டிக் காட்டுவதும் கருதிப்பார்க்கலாம்.

குழந்தைகள் வளரும்போதே அவர்களைப் பரிவோடு வளர்த்தால் மட்டும் போதாது, பண்போடும் வளர்க்க வேண்டும். இன்றைய குழந்தைகள் தாமே நாளைய உலகத்தின் நாயகர்கள். எனவே,

**இன்று குழந்தைகள் நீங்கள் எனினும்**
**இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்**

என்று பாவேந்தர் பாடியுள்ளார். 'நம் நாடு என்ற தோட்டத்தில் நாளை மலரும் முல்லைகளே" என்ற திரைப்பாடல் பாவேந்தர் பாதையில் அமைந்திருப்பதை நாம் கேட்டிருக்கிறோம்.

**வளரும்...**







1) 08.09.2021 உலகத்தமிழ் படித்து மகிழ்ந்தேன்.

இதழ்தோறும் தித்திக்கும் செய்திகளும்,கருத்துடைய கட்டுரைகளும் நம்மை மகிழ்விக்கின்றன.

தொடங்கப்பட்ட பள்ளிகள் அறிவுச் செழிப்பும் விடுதலை உணர்வும் அமைய வழி காட்டட்டும் என ஆசிரியம் பகுதியில் ஆசிரியர் நிறைவு செய்திருப்பது பொருத்தம்தான்.

கொரோனா தீநுண்மி பாதுகாப்பு கவசங்களோடு குழந்தைகள் கல்வி பெறட்டும்.

கலைமகள் இதழ் நூறாண்டையும் தொட்டுத் தாண்டி மிளரட்டும் என வாழ்த்துகிறேன். கீழாம்பூராருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்.

1996-ல் முதன் முறையாக அமெரிக்கா வந்த பெருங்கவிஞர் ஈரோடு தமிழன்பனின் கவிதையை வாசித்திட வாய்ப்பினைத் தந்த முனைவர் சோமலெக்கு நன்றி.

ஆசிரியருக்கு ஒரு வேண்டுகோள்...

அரசாணை (வாலாயம்) எண்:245,தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(விளம்பரம்)த் துறை,நாள்:24.08.2021-ல் தெரிவித்திருப்பது போல் "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்- சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் "என்ற சிறப்பு வாசகத்தினை இதழ்தோறும் வெளியிடலாமே.

பின் குறிப்பு:இது எனது தனிப்பட்ட விருப்பமே. ஆசிரியரின் முடிவுக்குட்பட்டதே அன்றி வேறில்லை.

கவிஞர் பேரா,நெல்லை.



2) அல்லிநிகர் அருங்கட்டுரைகள் அமைந்த உலகத்தமிழிதழ் என்பது சொல்லி மகிழ வேண்டிய சுந்தரச் சொற்றொடர்.

புலவர் இளஞ்செழியன்

3) அன்புள்ள அருள்,

உலகத்தமிழ் இதழுக்கு உங்களின் உழைப்பைப் பார்க்க மிகவும் மலைப்பாக உள்ளது. பெரும்பொறுப்பு. உங்களுக்கு ஏதாவது புதிதாக அனுப்ப வேண்டுமென்று நான் நினைப்பதற்குள் 3 இதழ்கள் வந்துவிடுகின்றன. இந்த இதழில் எழுதியுள்ள இலின்யு தாங்கு அவர்களைப் பற்றி எழுதியது நானா என்று எனக்கே நினைவில்லை. எப்பொது நான் இதனை எங்குப் பகிர்ந்தேன்?

பேராசிரியர் செல்வகுமார், கனடா.

4) அருமை படைப்பு. சுருங்க சொல்லி விளங்க வைக்கிறது. நற்றியையா.

திரு.பன்னீர் செல்வம், மதுரை





5) இவ்வார உலகத் தமிழிதழில், பள்ளிகள் மேல்நிலை மாணவர்களுக்கு மீண்டும் திறக்கப்பட்ட மகிழ்ச்சியை ஆசிரியர் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

ஔவை மூதாட்டியின் ஆத்திசூடி மூர்க்கரோடு சேரக் கூடாது என்கிறது; நாட்டில் அரசியலாளர்கள் பலருக்கு அது இன்னும் புரியவில்லை. பெண்மையைப் போற்ற வேண்டும் என்னும் பாரதியின் வரிகள் வீரம் மிக்கவை; அவர் காட்டிய வழியில் இன்று நாட்டில் பல புதுமைப் பெண்கள் உலவுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

முனைவர் சோமலெ அவர்கள் குட்டி இந்தியா எனப்படும் நியூ ஜெர்சி மாநிலத்தின் சிறப்புக்களை அவருக்கே உரித்தான நகையுணர்வுடன் அழகுறப் பட்டியலிட்டு உள்ளார்.

தேன் துளிகள் இரண்டும் தமிழ்த் துளிகளாக இனிக்கின்றன. அதிலும் அந்த ஈழத்துக் கவிஞரின் பாடல் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

உரைவேந்தர் ஐயாவின் கட்டுரை, அக்காலத்தே அரசர்கள் குடி மக்களின் கல்வி நிலை மேம்பாட்டில் அதிகக் கவனம் செலுத்தவில்லை என்ற வருத்தத்தை நம் நெஞ்சிலும் ஏற்படுத்துகிறது.

முனைவர் தேவி அவர்கள், குழந்தைகள் இலக்கியத்தில், கூறியது கூறல் குற்றமில்லை என்ற சுவையான உண்மையைப் பாடல்களுடன் அருமையாக நிறுவியுள்ளார்.

திருமதி சீதை அவர்களின் கட்டுரை, திருவதிகை திருத்தலத்தின் சிறப்புக்களை அழகுற எடுத்துரைக்கிறது.

திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் மாணிக்கனாரின் மாணிக்கத் தமிழை வியக்கும் போது, கம்பரின் கவி நயத்தையும் நம்மை நுகரச் செய்கிறார். அது அவரது சான்றாண்மைக்குச் சான்றாக விளங்குகிறது.

திரு.குமரவேலன் அவர்களின் கட்டுரை, தொல்காப்பியத்திற்கு இளம்பூரணார் போல, இளம்பூரணத்திற்கு பேராசிரியர் குருசாமி அமைந்த சிறப்பை விவரிக்கிறது.

பேராசிரியர் முத்துராமலிங்கனார், முதல்வர் ஸ்டாலின் அவர்களின் தமிழ்ப் பற்றையும், தமிழுக்கு அவர் ஆற்றும் சிறப்புக்களையும், சிறப்பாகத் தம் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

அறிஞர் முருகவேள் அவர்களின் கட்டுரை, ஒல்காப் புகழ் தொல்காப்பியத்தின் சிறப்புக்களைத் தொகுத்தளிக்கிறது. அதில் உள்ள அந்த வெண்பாவின் சொல் நயமும், பொருள் நயமும் அழகோ அழகு!

மருத்துவர் தாரா அம்மையார், மருத்துவக் கட்டுரையிலும் தம்மை மறந்து பாரதிதாசனின் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்தி எழுதியுள்ள பாங்கு, படிப்போரை வியக்க வைக்கிறது!

திரு.இராம்குமார் அவர்களின் கட்டுரை, ஒரு சிறிய கதையின் மூலம், ஒரு பெரிய உண்மையைச் சிறப்பாக விளக்குகிறது.

திரு.சனார்த்தனன் அவர்கள், கேரள மகாகவி குமாரனாசானின் கவிச்சிறப்பைத் தன் கட்டுரையில் தக்க பாடல்களுடன் தெளிவுறுத்தி இருக்கிறார்.

திரு.வெங்கடேசன் அவர்களின் கட்டுரை, கணினியியலில் மறைப்பியலாக உள்ள உண்மைகளை அனைவரும் அறிய வெளிப்படுத்துகிறது!

தொல்லிலக்கியத் தோரணம் நீரின் இன்றியமையாச் சிறப்பைப் பல மொழிகளில் எழிலாகத் தொகுத்து வழங்குகிறது.

பூமழை மாமணி துரை தனபாலன்



செயல்வாணர் இராம்குமார் சிங்காரம்

## தலைமையின் தனித்துவம்

தலைமைப் பொறுப்புக்கு வருபவர்கள் எல்லோரும் நல்ல தலைவர்களாக ஆகிவிடுவதில்லை. யாரிடம் தலைமைப் பண்பு இருக்கிறதோ அவர்களே மிகச்சிறந்த தலைவராகத் திகழ்கிறார்கள்.

தனக்கு கீழே பணியாற்றுபவர்களை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல் இருப்பது, அவர்களின் தேவை அறிந்து உதவுவது, தவறுகளை திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவது பணியாளர்களின் முழுத்திறமையையும் வெளிக்கொணரச் செய்யும் தலைமைப் பண்பின் முக்கியமான தகுதிகள்.

ஒருவருடைய செயல்பாடுகள் நிறைவு அளிக்கவில்லை என்றால் அவரை வேலையைவிட்டு அனுப்புவது அல்ல, தலைமைக்கு அழகு. தேவையான பயிற்சி அளித்து அவரை மீண்டும் சிறந்த பணியாளராக உருவாக்கும் கடமையும் தலைமைப் பொறுப்பில் இருப்பவருக்கு உண்டு.

ஒரு ஜென் துறவியிடம் நிறைய சீடர்கள் இருந்தனர். ஒரு சீடன் திருடும்போது பிடிபட்டுக் கொண்டான். துறவி கண்டுகொள்ளவே இல்லை. மீண்டும் ஒரு முறை திருடும்போது பிடிபட்டுக் கொண்டான். அப்போதும் துறவி கண்டுகொள்ளவில்லை.

தன் குருவின் செயலால் கோபமடைந்த மற்ற சீடர்கள், "அந்தச் சீடனை வெளியே அனுப்பாவிட்டால் நாங்கள் அனைவரும் வெளியேறப் போகிறோம்" என்றனர்.



சீடர்களின் கோபத்தில் இருந்த நியாயத்தை உணர்ந்த குரு அமைதியாக, "சீடர்களே நீங்கள் எல்லோரும் புத்திசாலிகள். உங்களால் எது சரி, எது தவறு என்று அறிய முடிகிறது. எனவே எங்கு சென்றாலும் பிழைத்துக் கொள்வீர்கள். நல்லது, கெட்டது தெரியாத அந்தச் சீடனை நானும் அனுப்பிவிட்டால் வெளியே போய் அவன் என்ன செய்வான்? அவனுக்கு நல்லது, கெட்டது சொல்லித்தர வேறு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அந்தச் சீடன் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. அதன் பிறகு அவன் திருடவே இல்லை.

சாதாரணமானவர்கள் குற்றவாளிகளை தண்டிப்பார்கள். தலைமைப் பண்புமிக்கவர்கள் குற்றத்தை உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்துவார்கள். கெட்டவரையும் நல்லவராக மாற்றும் வல்லமையை பெற்றிருப்பார்கள்.

**வளரும்...**



முனைவர் வி.அன்புமணி
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்,
இந்தி மற்றும் இதர மொழிகள் துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி
( தன்னாட்சி ), ஈரோடு.

23



## இராகுல் சாங்கிருத்யாயன்

*(1893 - 1963)*

இந்தி மொழியின் பயண இலக்கியத் தந்தை என்று போற்றப்படும் இராகுல் சாங்கிருத்யாயன் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை (45வருடங்கள்) பயணங்களில் கழித்தவர். 'இந்தியாவின் மார்க்க போலோ' என்ற பெருமைக்குரியவர். உலகின் ஆகச்சிறந்த விடயம் சுற்றுப்பயணம் மேற்கொள்வதே என்ற கொள்கையுடையவர் ஆவார்.

தனது பிறப்பால் உத்திரப்பிரதேச மாநிலத்தின் பண்டகா கிராமத்திற்குத் தனித்த அடையாளத்தைத் கொடுத்த ராகுல், குடும்பத்தின் மூத்த குழந்தையாக பிறந்து முத்திரை பதித்தவர். இளம் வயதில் கேதார்நாத் எனப் பெயரிடப்பட்ட ராகுல், பாட்டியால் வளர்க்கப்பட்டார். நான்கு சுவர்களுக்குள் அடைக் கப்பட்ட ஏட்டுக் கல்வியை கற்க விரும்பாமல், வெளியுலகில், தான் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் அனுபவக் கல்வியைக் கற்று யாரும் எட்ட முடியாத சிகரத்தைத் தொட்டு, ஏடுகள் அனைத்தும் தன்னைப்பற்றி எழுத வைத்தவர். இந்தி மொழி மீது மிகுந்த பற்று கொண்டவர். அவர்தான் அதற்குக் 'கரிபோலி' என்ற அடையாளத்தையும் கொடுத்தார்.

தான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மாநிலங்கள் (தமிழகம் உட்பட), வெளிநாடுகள் என அனைத்திலும் பல காலம் தங்கி, அங்குள்ள மக்களின் வாழ்வியலைப் படித்து, கலாச்சாரத்தைக் கற்று, அவர்தம் மொழியில் தேர்ச்சி பெற்று, தனது அறிவை விசாலமாக்கி, அதனை எழுத்தில் பதிவு செய்து, எதிர்காலத் தலைமுறையினர் பயன் பெறும்படி செய்த பெருந்தகையாளர் ராகுல் சான்ஸ்கிருத்யாயன். பன்மொழிப் புலமையாளராக(36 மொழிகள்), பல்துறை வித்தகராகத் திகழ்ந்த ராகுல் மொத்தம் 146 நூல்களை எழுதியுள்ளார். அதுமட்டுமன்றி, முற்காலத்தில் நாளந்தா பல்கலை நூலகத்திலிருந்து, திபெத்திற்கு சென்றடைந்த பல விலை மதிப்பற்ற புத்தகங்களையும், ஓவியங்களையும் இந்தியாவிற்கு வெகு பாடுபட்டு கோவேறு கழுதைகள் மீதேற்றி, மீட்டுக் கொணர்ந்தார். இவை தற்போது பாட்னாவில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ளன.


1958ம் ஆண்டில் அவர் எழுதிய 'மத்ய ஆசியா கா இதிஹாஸ்' என்ற புத்தகத்திற்காக சாகித்திய அகாடமி விருதும், பின்னாளில் 1963இல்பத்மபூஷண் விருதும்அவருக்கு அளிக்கப்பட்டன. ஆனால் மகா பண்டிதர் இராகுல் சாங்கிருத்யாயன் விருது என்ற பெயரில் கேந்திரிய இந்தி சன்ஸ்தான் 1993ஆம் ஆண்டு முதல் 2007ம் ஆண்டு வரை சிறந்த பயண இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவப்படுத்தியதுதான் ராகுலுக்கு அரசு செய்த மரியாதை என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றின் பல பாகங்களையும், பூமிப்பந்தின் பல தடங்களையும் முடிந்தவரை நடந்தே கடந்து, தனது எழுத்தில் தடம் பதித்த ராகுல், இறுதிக்காலத்தில் தனது நினைவை இழந்தது தான் மிகப்பெரிய சோகம் எனலாம்.

முறையாகப் பள்ளியில் உயர் கல்வி பெறாத ராகுலைப் பல பல்கலைக்கழகங்கள் உலகெங்கும் இருந்து பணியாற்ற அழைத்ததே அவர் அறிவைப் பறைசாற்றும். அவரது 'மேரி ஜீவன் யாத்ரா' என்ற சுயசரிதம் மூலம்சந்தோஷியுடன் நடந்த குழந்தைத் திருமணம்,பின்னர் மங்கோலியப் பெண்ணான லோலாவை மணந்து மக்களைப் பெற்று, ருசிய அரசாங்கத்தால் அவர்கள் இந்தியாவிற்கு அழைத்து வர தடை விதிக்கப்பட்டது மற்றும் இறுதியாக கமலா என்ற நேபாள மற்றும் இந்தி மொழி எழுத்தாளரை மணந்தது போன்ற தன் விவரக் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

ஒரு கட்டத்தில், அவர் புத்த மதத்தைத் தழுவி, புத்தத் துறவியானார். பிற்காலத்தில் மார்க்சியக் கொள்கைகளாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டார். ஆங்கிலேயருக்கு எதிராக எழுதியதற்காக மூன்று ஆண்டுகால சிறைவாசம் அனுபவித்தவர் என்ற முறையில் விடுதலைப் போராளி என்ற முகமும் அவருக்கு உண்டு. நாவல், நாடகம், சிறுகதை, சுயசரிதம், பயண இலக்கியக் கட்டுரைகள் உட்பட பல தலைவர்களின் வாழ்க்கை சரிதங்களையும் ராகுல் எழுதியுள்ளார். 'வோல்கா சே கங்கா தக்' என்பது மிகவும் புகழ்பெற்ற, பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட அவரது நூலாகும்.

வளரும்...



வாகீச கலாநிதி கி.வா.ஜ.

பாண்டியர்கள் தமிழ்ப் புலவர்களை எல்லாம் ஆதரித்து அவர்களைக் கூட்டிச் சங்கத்தை நிறுவினார்கள். அதற்குத் தலைச்சங்கம் என்று பெயர். எண்பத் தொன்பது பாண்டிய அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக அந்தச் சங்கத்தைக் காப்பாற்றி வந்தார்களாம்.

சங்கத்தில் நிரந்தர அங்கத்தினர்களாகப் பல புலவர்கள் இருப்பார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலுள்ள பல கலைப் புலவர்கள் பாடல்களை இயற்றிவந்து அந்தச் சங்கத்தில் அரங்கேற்றுவார்கள் அரங்கேற் றப்பட்ட கவிதைகளை யெல்லாம் தமிழ் நாட்டார் அனுபவித்து இன்புறுவார்கள்.

புலவர் கூட்டத்தை யாதொரு குறைவும் இன்றிப் பாதுகாத்துவந்த பாண்டியர்களுக் குள் சிலர் தாமே சிறந்த புலவர்களாகவும் இருந்தார்கள்.

சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களோடு சிவபெருமான் முதலிய கடவுளர்களும் சேர்ந்து சங்கப் புலவர்களாக விளங்கினார்க ளென்று கதை சொல்லுகிறது, மரியாதைக் காகவோ, உண்மையில் அக்காலத்திருந்த தெய்வத் திறனாலோ அவர்களுக்குச் சில இடங்கள் இருந்தன என்று தெரிகிறது.



அகத்தியர் தலைச்சங்கத்தில் இருந்த புலவர்களுள் தலை சிறந்தவர். அவர் இயற்றிய அகத்தியம் என்ற இலக்கணமே அந்தக் காலத்துத் தமிழ் மொழிக்குரிய சட்டம். சிவபெருமானும் முருகக் கடவுளும் குபேரனும் சங்கப் புலவர்களாக இருந்தார்க ளென்று பழங்கதை சொல்லுகிறது.

இப்படி ஐந்நூறு நாற்பத் தொன்பது பேர்கள் சங்கத்தின் அங்கத்தினர்கள். அவர் களும் பிற புலவர்களும் பல பாடல்களைப் பாடி மொத்தத்தில் 4449 புலவர்களுடைய பாடல்கள் தலைச் சங்கத்தில் அரங்கேற்றப் பட்டன.

வளரும்...



சிந்தனைச் செம்மல் செங்கோட்டை சனார்த்தனன்



தகழி சிவ சங்கரப் பிள்ளை





**சு**மார் ஆயிரம் ஆண்டுப் பழக்கமுள்ள இம்மொழியில் எழுதும் எழுத்தாளர்களுள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை வெளி நாடுகளில் பயணம் செய்தவர்களின் எண் ணிக்கையை விரல்விட்டு எண்ணி விடலாம். வள்ளத்தோள் எனும் கவியும், தகழி, எஸ்.கே.பொற்றேகாடு எனும் எழுத் தாளர்கள் சிலர் மட்டுமே அன்று கேரளத் தைக் கடந்து வெளியுலகை எட்டிப்பார்த்த முதல் படைப்பாளிகள்.

ஆதி சங்கரர், இராஜ ராஜ வர்மா, ஸ்ரீ நாராயண குரு, விகே கிருஷ்ண மேனன், கே எம் பணிக்கர், கே பி எஸ் மேனன், கார்ட்டூன் கலைஞர் சங்கர் போன்றவர்கள் தம் சிந்தனைத் திறந்தாலும், சாதனை களாலும் ஏனைய துறைகளில் இந்தியா விற்கு உள்ளேயும் - வெளியேயும் கேரளத் திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இருப் பினும் இன்றும் உலகின் பல்வேறு பகுதி களில் வசிக்கும் பலருக்கும் மலையாள இலக்கியம் பற்றி சரியாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல திராவிடக் குடும்பம் என அழைக்கப்படும் மொழிகளின் உள்ளேயே ஒரு மொழியின் சிறந்த இலக்கியங்கள் ஏனைய மொழிகளில் போதிய அளவு அறிமுகமாகவில்லை என்பதும் வருத்தம் தரும் உண்மை. ஐம்பதுகளில் மலையாளக் கவிதை உலகில் ஏற்பட்ட மாறுதல்களைப் போன்று கதையுலகிலும் ஒரு புதிய அலை வீசத் தொடங்கியது.

**வளரும்...**




வெங்கடேசு ஜம்புலிங்கம், கணினியறிஞர்



## இரகசியத்தன்மை

உதாரணமாக முகிலன் ஒரு தகவலை எழிலனுக்கு அனுப்ப விழைகிறார் என எடுத்துக் கொள்வோம். இந்த தகவல் இவர்கள் இருவருக்கு மட்டுமே தெரிய வேண்டிய ஒன்று. முகிலன் எழிலனின் பொதுத் திறவியை கொண்டு அந்த தகவலை மறையாக்கம் செய்து மறைக்குறியீட்டை எழிலனுக்கு அனுப்புவார். எழிலனின் தனித் திறவியை தவிர வேறு எந்த திறவியாலும் மறைக்குறியீட்டை மறைநீக்கம் செய்ய இயலாது என்பதால் எழிலனால் மட்டுமே அந்த தகவலை மறைநீக்கம் செய்ய முடியும். இதனால் தகவலின் இரகசியத்தன்மை பண்பு காக்கப்படுகிறது.




## நம்பகத்தன்மை




உதாரணமாக முகிலன் எழிலனுக்கு அதிகாரபூர்வமாக ஒரு தகவலை அனுப்ப விழைகிறார் என எடுத்துக் கொள்வோம். முகிலன் தனது தகவலை தன் தனித் திறவி கொண்டு மறையாக்கம் செய்து எழிலனுக்கு அனுப்புவார். அவர் தனித் திறவியால் மறையாக்கம் செய்த தகவலை பின்னர் தான் அனுப்பவில்லை என மறுக்க இயலாது. இது அந்த தகவலின் மீது கையொப்பம் இடுவதற்குச் சமம். எழிலன் முகிலனின் பொதுத் திறவியை கொண்டு மறைநீக்கம் செய்து பெறும் தகவல் முகிலனிடமிருந்து அதிகாரப்பூர்வமாக வந்ததாக கருதப்படும். முகிலனின் பொதுத் திறவியை தவிர வேறு எந்த திறவியாலும் மறைக்குறியீட்டிலிருந்து மறைநீக்கம் செய்ய இயலாது. இதனால் தகவலின் நம்பகத்தன்மை மற்றும் மறுப்பின்மை பண்புகள் காக்கப்படுகிறது.

ஒளி வரும்

**திரு.அறிவரசன்,** தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் 1982ஆம் ஆண்டு தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை அவர் நினைவாக வெளியிடுகிறோம்.

37

| | | |
|---|---|---|
| 791 | Foreign Institutional Investors (FII) | வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் |
| 792 | Fine Rs.50 for biolation of stop line | நிறுத்தக் கோட்டை தாண்டி நிறுத்தினால் அபராதம் |
| 793 | Foam tender | நுரை பீச்சும் வண்டி |
| 794 | Water tender | நீர் தாங்கி வண்டி |
| 795 | Filling the prison agitation | சிறை நிரப்பும் போராட்டம் |
| 796 | Foundation seeds | ஆதார விதைகள் |
| 797 | Breeder seeds | இனப்பெருக்க விதைகள் |
| 798 | Nucleus seeds | கருவிதைகள் |
| 799 | Fidelity Guarantee claim | பற்றுறு உத்தரவாதக் கோரிக்கை |
| 800 | Four lane system | நான்கு வழிப்பாதை |
| 801 | Faculties | பாடப்புலங்கள் |
| 802 | Free Trade Zone | தடையிலா வணிக மண்டலம் |
| 803 | Fore closure | மீட்புரிமையைத் தடைசெய்து வரவேண்டிய கடன் தொகையை வசூலித்தல் |
| 804 | Financial Insitutions Department | நிதி நிறுவனங்கள் துறை |
| 805 | Field leothies | கண்ணி வாய்க்கால் |
| 806 | Film | படச்சுருள் |
| 807 | Family Court | குடும்ப விவகாரங்கள் குறித்த (விவகாரங்களை விசாரணை செய்யும்) நீதிமன்றங்கள் |
| 808 | Free on Board | கப்பல் சரக்குக் கட்டணமின்றி |
| 809 | Focal spray | நோய்கண்ட பகுதிகளில் மருந்து தெளித்தல் |
| 810 | Food for work programme | பணிக்கான ஊதியத்தில் ஒரு பகுதியை உணவுப் பொருளாக வழங்கும் திட்டம் |

*உண் கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனும் தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறாகுதல்
பண்டும் இவ் உலகத்து இயற்கை அஃது இன்றும்
புதுவது அன்றே புலனுடை மாந்திர்*

*- பெருங்கடுக்கோ, கலித்தொகை, 22 :1 –4*

கடன் பெறப் பணிவாகப் பேசும்போது
ஒருவரது முகமும், அதனைத் திருப்பிக் கொடுக்கும்போது அவரது முகமும் மாறுபடுவது புதியதல்ல. இவ்வுலகில் இதற்கு முன்பும் இருந்த ஒன்றுதான்.

*- முனைவர் ஆ. மணவழகன்*

*Glum is Face when loan is got;
turns normal when repaid;
change is native, never mind;
index not new to altering world.*

*ஆங்கிலத்தில்
முனைவர் ந.அருள்*

ऋण मांगने के आज्ञा से बोलते समय एक का चेहरा, उसे वापस देते समय उसका चेहरा बदलना नया नहीं होता है। यह कुछ ऐसा है जो इस दुनिया में पहले भी मौजूद है।

*இந்தியில்
முனைவர் சௌ. வீரலட்சுமி*



# தொடர்புக்கு

ulagathamizh@gmail.com

# பார்வைக்கும்… படிப்புக்கும்…

www.facebook.com\ulagathamizh

www.twitter.com#ulagathamizh

www.ulagatamil.in

www.utsmdu.org

ulagathamizh.blogspot.com